விலை சதம் 15

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, வைகாசி 13உ (26-5-68) ஸபர் 27— புத்தகம் 22 இதழ் 36

மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்




## தினபதியின் பொய் செய்திக்கு முஸ்தபா மறுப்பு!

ஐ. தே. கட்சி செயற் குழுக் கூட்டத்தில் மாவட்ட சபைகளை எதிர்த்தும், தமிழரசுக் கட்சியைத் தாக்கியும் தாம் பேசியதாக மே 22-ந் திகதிய தினபதியில் வெளியிடப்பட்டது சிறிது கூட உண்மைக் கலப்பற்ற ''முழுப் பொய்'' என்று மறுத்திருக்கிறார் உதவி சமூக சேவை அமைச்சரும் நிந்தாவூர் எம். பியுமான ஜனாப் முஸ்தபா.

நிர்வாகத்தைப் பரவலாக்கி அவ்வப் பகுதி மக்களிடம் அவ்வப்பகுதியை நிர்வகிக்கும் உரிமையை அளிக்கும் மாவட்ட சபைகளைத் தாம் எப்போதும் ஆதரித்து வந்திருப்பதாகவும், மாவட்டசபைகள் முஸ்லிம்களுக்குப் பாதகமின்றி நிறுவப்பட வேண்டுமென்பதே தமது நோக்கம் என்றும் ஜனாப் முஸ்தபா அறிவித்துள்ளார்.

தினப் பொய் அடிக்கும் டுப்களுக்கு இந்த ஒரு உதாரணம் போதாதா?

### மாவட்ட சபை:

# எதிர்க்கட்சிகளின் பொய்ப் பிரசாரத்தை முதலில் முறியடிக்க அரசாங்கம் முடிவு!

மாவட்ட சபைகள் குறித்து நாட்டில் கூட்டாட்சிக் கட்சிகளும் வகுப்புவாத ஸ்தாபனங்களும் நடத்தும் பொய்ப் பிரசாரங்களை முறியடிப்பதற்கான முதற் திட்டமாகவே மாவட்ட சபை மசோதாவுக்கு பதிலாக அது பற்றிய ஓர் வெள்ளையறிக்கையை அடுத்த வார இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அரசாங்கக் கட்சிப் பேச்சாளர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

வெள்ளையறிக்கை மீது சாங்கோபாங்கமாக பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெறும் போது, மாவட்டசபைக்கு எதிராக எதிர்க் கட்சியினரும், சில பௌத்த பிக்குகளும், வகுப்புவாத ஸ்தாபனங்களும் நாட்டில் நடத்திவந்தது முழுவதும் பொய்ப் பிரசாரங்கள் என்பது நாட்டுமக்களுக்கு இலகுவில் புரிந்து விடுமென்றும், அதன் பின், நாட்டு மக்களிடையே— குறிப்பாக சிங்கள மக்களிடையே விதைக்கப்பட்டுள்ள தப்பெண்ணங்கள் நீங்கி விடுமென்றும் மேற்படி அரசாங்கக் கட்சிப் பேச்சாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

அந்நிலை ஏற்பட்டவுடன் சகல மக்களின் ஆதரவுடன் மாவட்ட சபை மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது

(5-ம் பக்கம் பார்க்க)

## நவரத்தினம் அடித்த அரசியல் பல்டியின் பின்னணி; திரைமறைவில் நடந்ததென்ன?

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. நவரத்தினம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அடையாள அட்டை மசோதாவை எதிர்த்து பேசியதும், எதிர்க்கட்சிக்கு சென்றதுமான சம்பவங்களுக்கு பின்னால் திரைமறைவில் நடந்ததென்ன என்பதுபற்றி அரசியல் வட்டாரங்களில் பல ஊகங்கள் கூறப்படுகின்றன.

தமக்கு அமைச்சர் பதவி வாங்கித் தரவில்லையே என்ற ஏக்கத்தால், தமிழரசுக் கட்சிக்கு எதிரியாக மாறியுள்ள இனிப்பு வியாபாரி ஒருவரும் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிதற்காக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட சிலரும், தமிழ் மக்களின் உரிமைகளுக்கு குழி பறிப்பதையே மூல நோக்கமாகக் கொண்ட ஒரு தினசரிப் பத்திரிகையின் ஆசிரியரும் சேர்ந்து விரித்த வலைக்குள் திரு. நவரத்தினம் வளமாக மாட்டுப்பட்டுக் கொண்டதாகவும், அவர்களின் ஆலோசனையுடனும், தூண்டுதலுடனுமே திரு. நவரத்தினம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்தாரென்றும் கூறப்படுகிறது.

அடையாள அட்டைகள் ஆட்பதிவு மசோதாபற்றி எந்தவொரு தமிழரசுப் பொது குழு செயற்குழுக் கூட்டத்திலாவது ஆராய்வதற்கு திரு. நவரத்தினம் முன்வரவில்லையென்றும், ''புதிய நண்பர்கள்'' அவரை செயற்குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ள விடாது தந்திரமாக தடுத்து வந்தனர் என்றும் தெரிகிறது.

அடையாள அட்டை மசோதா பற்றி திரு. நவரத்தினம் முன்கூட்டியே எதுவும் பேசவிடாது தடுத்து வைத்திருப்பது; இறுதிச் சமயத்தில் மசோதாவை எதிர்க்கும்படி தூண்டுவது; அதன் பலனாக தமிழரசுக்கட்சி திரு. நவரத்தினத்தை கண்டிப்பாக வெளியேற்றியேதீரும்; அப்போது திரு. நவரத்தினத்தை தங்கள் வலைக்குள் இழுத்துக் கொள்வது என்பதே 'விடுதலைக்' காரர்களின் சூழ்ச்சித் திட்டமாக இருந்ததென்றும், திரு. நவரத்தினமும் தம்மையறியாமலே அவர்களின் கைப்பொம்மையாகிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

திரு. நவரத்தினம் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சிக்கு சென்றதும், அவருக்கு முதன் முதல் மாலையிட்டு வரவேற்றவர்கள் இவர்கள் தாம். 'தினபதி' யென்னும் தமிழ் விரோத ஏடு, புகைப்பட நிருபரை அனுப்பி படம் பிடித்து தனது இதழில்

(5-ம் பக்கம் பார்க்க)

### அன்றும் இன்றும்




# இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




முருகுப்பிள்ளை
தாளங்குடா

கே: பொய்க்கும், மெய்க்கும் உள்ள . வித்தியாசம் என்ன?

ப: 'தனிப் பெருந் தலைவருக்கும்' தந்தை செல்வாவுக்கு முள்ள வித்தியாசம் எதுவோ அதுதான்!

கே: மனிதன் மனிதனுக வாழ வேண்டும் என்று எண்ணுபவன், முதலில் கடைப்பிடிக்க வேண்டியது என்ன?

ப: முதலில் எல்லோரையும் மனிதர்கள் என்று கருத வேண்டும்!

ஃ

எஸ். மலர், எஸ். குமாரி
ஓமந்தை

கே: சில கடமைகளை ஆற்றுவதற்காக உயிரைக் கையில் பிடித்திருக்கும் போது சகிக்கவே முடியாத துன்பம் வந்தால் என்ன செய்வது?

ப: உயிரை இன்னும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு துன்பத்தை தாங்கிக் கொள்ள வேண்டும்!

ஃ

சாந்தி குலம்
பருத்தித்துறை.

கே: பருத்தித்துறை நகர சபை நரகசபையாக மாறிக் கொண்டிருக்கிறது. இதை மாற்ற ஒரு வழி கூறுங்கள்?

ப: அடுத்த நகரசபைத் தேர்தலின் போது நரக ஆட்சி நடத்தும் நிர்வாகத்தை இறக்கிவிடுவதுதான் சுலபமான வழி!

ஃ

ஆர். கண்ணன்
நீர் கொழும்பு

ப: மானிலத்தில் விதியை வென்ற மனிதர்யாருமில்லை என்ருல் விதியை மதியால் வென்ற மார்க்கண்டேயர் மர்மம் என்ன?

ப: காலனிடமிருந்து மார்க்கண்டேயர் தம் மதியை உபயோகித்து தப்ப வேண்டுமென்பது அவரது தலைவிதி என்பார் விதி நம்பிக்கையுள்ள ஒருவர்!

கே: அஞ்ஞானியும், விஞ்ஞானியும் மெய்ஞானியும் சந்தித்தால்...?

ப: விஞ்ஞானி சொல்வது மெய்ஞானிக்கு விளங்காது, மெய்ஞானி சொல்வது விஞ்ஞானிக்கு புரியாது. இந்த இருவர் சொல்வதுமே அஞ்ஞானிக்கு புரியாது திண்டாடுவான்!

ஃ

அ. இராசநாயகம்,
மிருசுவில்.

கே: கேட்கத் தகாதது என்ன?

ப: தரமற்ற கேள்விகள்!

கே: கல்வியா, செல்வமா வீரமா இன்றைய உலகில் சிறந்தது?

ப: இன்றைய உலகில் வீரம்தான் முன்னணி வகிக்கிறது. கல்வியிலும், செல்வத்திலும் சிறந்து விளங்கும் அமெரிக்காவையே வடவியட்னும், வியட்கொங் படைகளின் வீரம் கலக்குகிறதே!

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: ஜீ. ஜீ. எதை யோசிக்கிருர்?

ப: அவருக்கு எந்த யோசனையும் இப்போது ஓடவில்லையாம்—தூங்கும் போதும் மாவட்ட சபை பசாசு போல வந்து பயமுறுத்துகிறதாம்!

ஃ

தமிழ்மாறன்,
அக்கரைப்பற்று.

கே: மாவட்ட சபை உள்ளடங்கிய தேசிய அரசாங்கத்தின் சிம்மாசன பிரசங்கங்களை ஆதரித்து வாக்களித்த தமிழ்காங்கிரஸ்வாதிகள் இன்றுபுதிதாக எதிர்ப்பு தெரிவிப்பது ஏன்?

ப: தமிழ் மக்களை முட்டாள்கள் என்று அவர்கள் கருதுவதால்!

ஃ

கே. கே. ராஜா,
திருகோணமலை.

கே: அழகை ஆயுதமாகக் கொண்டு வருவாயைத் தேடிக் கொள்ளும் பெண்களைப் பற்றித் தாங்கள் கூறுவதென்ன?

ப: அழகுக்கு அடிமைப்படும் ஆண்களின் முட்டாள் தனத்தைப்புரிந்துகொண்ட புத்திசாலிகள் அவர்கள்!

ஃ

சிவசிதம்பரம் பிரியன்,
தொண்டமாஞறு.

கே. திரு. பொன்னம்பலம் செல்வச்சந்நிதி கோவிலுக்கு சாதிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு வருகை தந்து அவர் அதைத்தீராமல் காரால் இறங்கி வந்தவுடன் எமதுகட்சிக்கு இங்கு வாலிப முன்னணி இருக்கிறதா என்று ஏன் கேட்டார்?

ப: அவருக்கு சாதி ஒழிப்பைவிட கட்சி வளர்ச்சியே முக்கியமாக இருப்பதால்!

ஃ

ம. ஸ்ரீகந்தராஜ்,
பருத்தித்துறை.

கே: மாவட்ட சபையை கடைசிவரையும் எதிர்ப்போம் எனக் கூறிய தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் இப்பொழுது நடு நிலைமை வகிப்போம் என அறிக்கைவிடுவதன் மர்மம் யாதோ?

ப: மாவட்ட சபைகளை கொண்டு வந்தால் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம் என பிரதமரை பயமுறுத்திப் பார்த்தார்களாம்—அதற்கு பிரதமர் அசைந்து கொடுக்கவில்லையாம்—அதன் பிரதிபலிப்பே இது!

ஃ

ஜெயம்,
தெல்தொட்டை.

கே: கவலைகளை மறக்க இந்திராகாந்தி என்ன செய்கிருர்?

ப: தன் அப்பா நேரு படத்தை ஒரு முறை பார்க்கிருர் அவரது கவலைகள் எல்லாம் பறந்துவிடுகின்றன.

ஃ

தமிழன்,
காரைநகர்.

கே: மாவட்ட சபை மசோதாவை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் எதிர்ப்பதேன்?

ப: அது ஏன் என்பது அவருக்கே தெரியாதே!

ஃ

தா. ச. லோசன்,
விந்துலை.

கே: திரு. பொன்னம்பலம் தேர்தல் காலங்களில் மூன்றுவருடங்களில் உரிமைகளைப் பெற்றுத் தருவேன் என்று பலமேடைகளில் தம் பட்டமடித்துத் திரிந்தாரே ஆனல் தற்பொழுது மூன்று வருடங்களும் முடிந்து விட்டன. இதுவரை தமிழ் மக்களுக்கு என்ன உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தார்?

ப: உங்கள் கேள்வியில் ஒரு திருத்தம் — திரு. பொ. மூன்று வருடத்தில்லல; மூன்று மாதத்திற்குள் தான் உரிமை பெற்றுத் தருவதாக கூறியிருந்தார். எனவே இன்னும் அவரது கணக்குப்படி 3 மாதங்கள் முடியவில்லையோ என்னவோ?



நாவலர் பெருமானுக்கு சிலை வைப்பது என்ற சமாச்சாரம் சென்னையில் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றபோது இங்குள்ள பத்திரிகைகளில் வெகு தீவிரமாக அடிபட்டது.

நாவலருக்குத் தமிழ் நாட்டில் சிலை வைக்க வேண்டும் என்று திரு. பொன்னம்பலத்துக்கும் அப்போது தான் ஞாபகம் வந்ததாம்.

தமிழகத்தில் நாவலர் சிலை நிறுவ இலங்கைப் பணத்தை எதிர்பார்க்காமல் தாமே ஏற்பாடு செய்வதாகத் திரு. கருணநிதி நமது உள்ளூராட்சி அமைச்சரிடம் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனல் எல்லாமே புஸ்வாணமாகப்போய்விட்டன.

தமிழகத்தில் சிலை நிறுவப்பட்டாலென்ன, நிறுவப்படாவிட்டாலென்ன நாவலர் ஐயா பிறந்த இந்த நாட்டிலாவது சூட்டோடு சூடாகச் சிலை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுமென பலர் எதிர்பார்த்தார்கள். ஏமாற்றம் தான்!

இலங்கைத் தமிழர்கள் வெறும் சொல் வீரர்கள் தாம் - செயல் வீரர்களில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர்கள் இப்போது அந்த முயற்சியில் இறங்கியிருக்கிருர்கள்.

எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றல் படைத்தவர்கள் மாணவர்கள் - ஆகவே விரைவில் பல்கலைக் கழகத்தில் நாவலர் பெருமான் சிலையை நம்பிக்கையோடு எதிர்பார்க்கலாமா?

★

ஆலயம் புனிதமான இடம். அங்கு அரசியல் வாதிகளை சொற்பொழிவுக்கு அழைத்தால், அது பின்னர் ஆலயமாக விளங்க முடியாது. ஏனெனில் இங்குள்ள அரசியல் வாதிகளுக்கு எதை எங்கு பேசுவது என்று பகுத்துணரத் தெரியாது.

அண்மையில் கொழும்பில் உள்ள ஓர் ஆலயத்தில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு ஓர் அரசியல்வாதி அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு நேரமில்லாததால் அவரது சக தர்மிணியார் கலந்து கொண்டார்.


இந்த அம்மையார் முதன் முதல் கலந்து கொண்ட நிகழ்ச்சி இதுதானும், மேடை கிடைத்து விட்டதே என்ற ஆனந்தத்தில் ஏற்கெனவே எழுதிவந்ததை வாசித்தாராம். அவ்வளவும் ஆன்மீக விஷயங்கள் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை; அரசியல், அரசியல், அரசியல்.

அதுவும் மாற்றுக் கட்சியொன்றின் மீது வசை புராணம். பாவம், அம்மையாருக்கு முதல் அனுபவம்; போகட்டும் என்று விட்டாலும், ஆலயத்தை இப்படி அசிங்கப்படுத்தலாமா? ஆலய நிர்வாகிகள் சிந்திக்க வேண்டும்!

★

சிறிமா அம்மையாரின் சேலையைப் பிடித்துக் கொண்டு தொங்கினல் தான் இந்நாட்டில் தமிழ் மக்கள் சீரோடு வாழ முடியும் என்று இ. தி. மு. க. என்று தம்மைக் கூறிக் கொள்ளும் சில வால்கள் சொல்லித் திரிகின்றனவல்லவா? ஆனல்

(5-ம் பக்கம் பார்க்க)



அப்டுலித் தரையில் சென்று இறங்க வேண்டியவர்களுக்கு அப்டருதி சூழ்நிலைக்கேற்றவாறு தங்களைச் சமாளித்துக் கொள்ளும் தன்மையை உணர்த்த வேண்டும். டபூவர்றற பிரதேசத்தில் எவ்வாறு நடமாடவேண்டும் என்பதற்கான பயிற்சி அமெரிக்காவில் நடை பெறுகிறது.

## சங்கப் பலகை

# "சுரதா"

ஆசிரியர்: கவிஞர் சுரதா.

விலை சதம்: 25 (திங்கள் இருமுறை)

முகவரி:- வி. சி. கார்டன் தெரு, சென்னை

உலக மொழிகளில் நம் தமிழ் மொழியே 'கவிதை மொழி' என்னும் சிறப்புக்குரியதாகும். தமிழைப் போல வேறு எந்த மொழியிலும் இனிமை சொட்டும் கவிதைகள் கிடையாது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து.

தமிழர்கள் சங்க காலத்தில் உரையாடும் போதும் கவிதைநடையிலேயேசாதாரணமாக உரையாடி வந்தனர். அவ்வளவு தூரம் கவிதையிலே களியின்பம் கண்டவர்கள் தமிழர்கள்.

என்ன காரணத்திஞலோ இடையில் சில காலம் தமிழர்தம் கவியார்வம் குன்றினுலும், இன்று மீண்டும் தமிழ் மக்களை கவியார்வம் அதிகமாக ஆட்கொண்டு வருகிறது. இன்றையஇளைஞர்களிடையே கவிதை எழுதவேண்டுமென்ற துடிப்பு அதிகம். இதற்கு வழி வகுத்தவர் பாவேந்தர் பாரதிதாசன்.

பாவேந்தருக்குப் பின்னர் இன்று தம் சுவை மிக்க கவிதைகளால் தமிழ் மக்களைக் கவர்ந்து, அவர் தம் உள்ளங்களில் நீங்கா இடத்தைப் பிடித்துள்ளவர் கவிஞர் சுரதா. சுரதாவின் கவிதைகள் தரும் மயக்கத்தில் சூழ்கி பலர் கண்ணை மொய்க்கும் ...க்களாக ... இன்றைய இளங் கவிஞர்களும் கவிதையார்வம் படைத்த மற்றையோரும்.

பண்டைய இலக்கியங்களில் ஆழ்ந்த ஆராய்ச்சியும் நிறைந்த புலமையும் உடைய கவிஞர் சுரதாவிலிருந்துபெருக் கெடுத்த 'இலக்கிய' ஊற்று இடையில் அடை பட்டது கண்டு கவலையடைந்தவர்கள் பலர். ஆனல் இப்பொழுது மீண்டும் 'சுரதா' வாகவே சுரதாவின்கவிதை ஏடு மிளிர்ந்துள்ளது கண்டு பூரிப்படைகின்றன இலக்கிய உள்ளங்கள்.

கவிதை நடையிலே 'குயில்' என்ருெரு ஏட்டை வெளியிட்டு புரட்சி செய்தவர் புரட்சிக் கவிஞர். இன்று அவரது பாதையிலே 'சுரதா' என்ற கவிதை ஏட்டினை நடத்த துணிவுடன் முன்வந்துள்ளார் கவிஞர்சுரதா.

சிறந்த உவமைக் கவிஞரான சுரதாவின் கவிதையொவ்வொன்றும் மீண்டும் மீண்டும் படித்து சுவைக்க வேண்டியவை. வாழ்க்கை வட்டம், ஓலை உலகம், முன்னும், பின்னும், முத்துப்பந்தல், தோரண வாயில், போன்ற பல்வேறு அம்சங்களும் சிறந்து விளங்குகின்றன.

பாவேந்தரின் சின்னத்தை முத்திரைக் கவிதைக்கு தேர்ந்தெடுத்திருப்பது பொருத்தமானது.

நமக்கு தெரியாதபழம் பாடல்களை யெல்லாம் தேடி எடுத்து ஆராய்ந்து படைக்கிருர் சுரதா.

சுரதாவின் பணி — காலத்தை வெல்லக் கூடியது — ஈடிணையற்றது—

—மகேன்

# எண்ணம்

## அடிப்படைக் கொள்கையிலிருந்து தமிழரசுக்கட்சி விலகிச் செல்கிறதா?

தமிழ் பேசும் மக்களின் அரசியல் சுதந்திரத்தையும் அடிப்படை உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதையே மூலாதார நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி, இன்று தனது அடிப்படைக் கொள்கைகளிலிருந்து நழுவி வருவதாகவும், தமிழரசுத் தலைவர்களுக்கு பதவியாசை பிடித்து கொள்கைகளை காற்றில் பறக்கவிட்டு வருவதாகவும் கடந்த சில மாதங்களாக சில சோரம் போன அரசியல் வாதிகளும், மாற்றுக் கட்சியினரும் தம்பட்டமடித்து வருகின்றனர்.

1965-ம் ஆண்டு தமிழரசுக் கட்சி தனது அரசியல் உபாயத்தை மாற்றி ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து அரசாங்கம் அமைப்பதற்கு உதவிய நாளிலிருந்து மெல்ல மெல்ல ஆரம்பிக்கப்பட்டு வந்த இந்தப் பிரசாரம் இப்பொழுது மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது. போதாக் குறைக்கு பொதுவுடமை ஏடு ஒன்று கூட தமிழரசுக் கட்சி அடிப்படைக்கொள்கையை இழந்து அழிந்து போகிறதே என்று முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறது.

இத்தகைய பிரசாரங்களுக்கு சில தினசரிகளும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுவருகின்றன. மாற்றுக் கட்சியினர் தமிழரசுக் கட்சிக்கெதிராக நடத்தும் பிரசாரங்களை தமிழ் பேசும் மக்கள் நம்பப் போவதில்லையென்பது தெளிவானது. ஆனால் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காக, கட்சியிலிருந்து கல்தா கொடுக்கப்பட்டவர்களும்-கழுத்தைப் பிடித்து வெளியேற்றப்பட்டவர்களும், மாற்றுக் கட்சியினருடன் சேர்ந்து பொய்ப் பிரசாரம் நடத்தும் போது, தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு மயக்கம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்-மயக்கம் தானேயொழிய அவர்கள் அதை நம்பப் போவதில்லையென்பது நமக்கு தெரியும்.

தமிழரசுக்கட்சியைப் பற்றி இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு நன்றாகத் தெரியும். அதன் நோக்கம் என்ன என்பதும் தெளிவாகத் தெரியும். பதவியாசையோ வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்ற ஆர்வமோ தமிழரசுக்கட்சியிலுள்ள சாதாரண தொண்டனுக்குக்கூட துளியும் கிடையாது.

பதவியாசை தமிழரசுத் தலைவர்களுக்கு இருக்குமானால், 1965-ம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைந்த போது இன்னும் இரண்டு மூன்று மந்திரி பதவிகளை பெற்றுக்கொண்டிருக்க முடியும்.

இந் நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதே கட்சியின் மூலாதார முழு முதல் நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள கட்சி 1956 முதல் 1965 வரை ஒரு வகையான உத்தியை கையாண்டது. 1965க்கு பிறகு புதுவகையான அரசியல் உபாயத்தை கையாண்டு வருகிறது.

தனது இலட்சியங்களை அடையும் ஒரே நோக்குடன் 1956 முதல் 1965 வரை கட்சி அப்போதைய சிங்கள வெறிபிடித்த அரசாங்கத்தை எதிர்த்துத் தீவிரமான போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் நடத்தியது. தமிழ் பேசும் மக்கள் அபரிமிதமான ஆதரவை அள்ளிச் சொரிந்தார்கள். உலகம் வியக்கும் சத்தியாக்கிரகப் போரை 1961ல் நடத்தியது. மூன்று முறை அரசாங்கத்தைப் பதவியிலிருந்து வீழ்த்திக் காட்டியது. 10 ஆண்டு காலம் நேரடி நடவடிக்கைகளில் கட்சி பலரைப் பறி கொடுத்தது. அமரர் வன்னிய சிங்கம், கந்தையா, ஏகாம்பரம், இராசவரோதயம் போன்றோர் தங்கள் உயிரையும் அர்ப்பணித்தனர் — தலைவர்களும், தொண்டர்களும் தமிழ் பேசும் மக்களும் ஆற்றொணுக் கொடுமைகளை எல்லாம் அனுபவித்தனர். எனினும் எந்தச் சந்தர்ப்பத்திலாவது கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டதில்லை. இது ஒருவகை அரசியல் உபாயம்.

1965-ம் ஆண்டு அரசியற் காற்று மாறி வீசத் தொடங்கியது. இந்த அரசியல் காற்றினுல் தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை ஏற்பட இடமுண்டு என்பதை உணர்ந்த கட்சி தனது அரசியல் உபாயத்தையும் உத்தியையும் மாற்றிக் கொண்டது. சாதகமான அரசியல் நிலையைப் பயன் படுத்தித் தமக்குப் பதவிகளைத் தேடிக் கொள்ளவில்லை தமிழரசுக் கட்சியினர்—ஆனுல் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு வாய்ப்பாக அதனைப் பயன் படுத்தினர். அதற்காகவே தான் தேசிய அரசாங்கத்திலும் இணைந்தனர்.

எதிர்க்கட்சியில் இருப்பது சுலபமானது; பொறுப்புணர்வு எதுவுமின்றி எதையும்பேசலாம்; எதையும் செய்யலாம். ஆனுல் அரசாங்கத்திலிருக்கும்போது சில கட்டுப் பாட்டுக்குள், சில சட்ட திட்டங்களுக்குள் அமைந்து நடக்கவேண்டி இருக்கிறது. எடுத்தேன்; கவிழ்த்தேன் என்று எதையும் பேசிவிட முடியாது.

அரசாங்கத்தில் சேர்ந்து முக்கிய கட்சியாக அங்கம் வகிப்பதால் தமிழரசுக் கட்சியினர் முன் போல எதையும் "வெளிப்படையாக" கூற முடியாத நிலையிலுள்ளனர் என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். அப்படிக் கூறினுல் அரசாங்கத்திலுள்ள மற்றக் கட்சிக்கு ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்துவதாக இருக்கும். எனவே தான் பல பிரச்சினைகளில் கட்சி மௌனம் சாதித்து வருகிறது.

ஆனுல் இது எந்த விதத்திலும் கட்சி தனது அடிப்படைக் கொள்கைகளிலிருந்து நழுவுவது ஆகாது. தனது கொள்கைகளை நிறைவேற்றிக் கொள்வதிலே தான் கட்சி ஒவ்வொரு நிமிடமும் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

அரசாங்கத்தில் சேரவேண்டி ஏற்பட்டதால், கட்சி சில கோட்பாடுகளைத் தளர்த்தவேண்டி ஏற்பட்டிருக்கலாம். இது தவிர்க்க முடியாதது.

அகில இந்தியா என்பது ஒரு கேலிக் கூத்து என்று முன்பு முழங்கிய தமிழக திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது அகில இந்திய ஒற்றுமை பேசவில்லையா? 'பெற்ருல் திராவிடநாடு இன்றேல் சுடுகாடு' என்ற அறிஞர் அண்ணு இன்று பிரிவினை பேசுவோரைத் தண்டிப்பேன் என்று கூறும் நிலைக்கு வரவில்லையா?

இவையெல்லாம் தவறென்று நாம் கூறவில்லை. அரசியலில் சில வேளைகளில் சில கோட்பாடுகளை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படுவது சகஜம்.

கோட்பாடுகள் மாறலாம்; ஆனுல் கொள்கை மாறக் கூடாது.

தமிழகத்தில் தி: மு. க. திராவிடநாடு கேட்டது எதற்காக? தமிழ் மக்களும், தமிழ் நாடும் சுபீட்சமாக வாழ வேண்டுமென்பதற்காக.

இன்று அறிஞர் அண்ணு திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டாலும் தமிழ் நாடும், தமிழக மக்களும் சுபீட்சமாக வாழ வேண்டுமென்ற மூலாதாரக் கொள்கையைக் கைவிடவில்லை.

அதே போல இங்கும் தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தையும் அடிப்படை உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பது என்ற தனது மூலாதாரக் கொள்கையிலிருந்து இம்மியும் மாறவில்லை; என்றும் மாறவும் மாட்டாது.

சந்தர்ப்பவாதிகளினதும் அரசியல் எதிரிகளினதும் பொய்ப் பிரசாரங்களுக்குச் செவி கொடாது, தமிழ் பேசும் மக்கள் தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து தொடர்ந்து ஒன்ருக ஒரே அணியில் எழுந்து நின்ருல் சுபீட்சமான எதிர்காலம் அமைவது உறுதி.

# "மாவட்டசபையை எதிர்ப்பதற்கு எந்தக்காரணமும் தெரியவில்லை" —ஜீ. ஜீ.

# நூற்றுக்கு நூறு மா. சபைகளை நான் ஆதரிக்கிறேன்—என். எம்.

## ஹன்சாட் கூறும் உண்மை பாரீர்!

கடந்த வாரம் சுதந்திரனில் வெளிவந்த கூடார்த்த சித்திரத்தை பார்த்த வாசகர்கள் பலர் மாவட்ட சபைகளை எதிர்ப்பதற்கான காரணம் எதுவும் தமக்கு தெரியவில்லையென்றும் மாவட்ட சபைகளால் நாடு பிளவுபடுமென்று ஆர். ஜி. கூறுவது வெறுங்கற்பனையென்றும் எப்போது திரு. பொன்னம்பலம் தெரிவித்தார் என்பதை தெளிவு படுத்தும்படி எழுதியுள்ளனர்.

திரு. பொன்னம்பலம் மட்டுமல்ல இன்று மாவட்ட சபையை எதிர்த்து தமிழ்த் துவேஷப் பிரசாரம் நடத்தும் டாக்டர் என். எம். பெரேராவும் இன்னும் ஒரு படி மேலேசென்று மாவட்ட சபைகளுக்கு தாம் நூற்றுக்கு நூறு வீதம் ஆதரவு அளிப்பதாக கூறியிருந்தார்.

திரு. பொன்னம்பலமும், டாக்டர் என். எம்மும் இக் கருத்துக்களைத் தெரிவித்தது பொது மேடைகளில் கூட அல்ல. பாராளுமன்றத்தில் தான்.

### திரு. பொ. சொன்னது

1965-ம் ஆண்டுச் சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய



திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஒரு கட்டத்தில் பின் வருமாறு கூறியிருந்தார்.

"All that I say is, what particular objection there can be to District Councils purely as a means of extension of Local self Government, I do not see. But, of course, the Hon. Member for Dambedeniya has created a bogey of his own immagination. He seems to think that the creation of District Councils immediately and inevitably lead to the division of Ceylon

—G.G.Ponnambalam

*throne speach debate* - 1965

"உள்ளூர் சுய ஆட்சியை விஸ்தரிப்பதே மாவட்ட சபைகளின் துல்லியமான நோக்கம் என்ருல், அவற்றை எதிர்ப்பதற்கு குறிப்பிடத்தக்க காரணம் எதையும் நான் காண முடியவில்லை. ஆனுல் தம்பதெனியா உறுப்பினர் தமது கற்பனையில் ஓர் போலி எண்ணத்தை உருவாக்கியுள்ளார். மாவட்ட சபை ஏற்பாடு, உடனடியாகவும் தவிர்க்க முடியாமலும் நாட்டுப் பிரிவினைக்கு வழி வகுத்துவிடும் என்று அவர் நினைப்பதாக தோன்றுகிறது"
—ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1965 சிம்மாசனப் பிரசங்க விவாதத்தின் போது.

### என். எம். சொன்னது

1966ம் ஆண்டு ஆடி மாதம் 7ம் திகதி பாராளு மன்றத்தில் டாக்டர் என். எம். பேசிக் கொண்டிருக்கிருர்.



"What about your proposal to set up Regional Councils? Is the minister taking up the question or not? It is a matter long overdue. Even after your so called independence you are still running the out dated Kachcheri system. Year in and Year out we are fighting in, have the old Kachcheri system liquidated. Let us have a proper system of Local administration."

'பிரதேசசபை அமைப்பது பற்றிய உங்கள் திட்டம் என்னவாயிற்று? இந்தப்பிரச்சினையை அமைச்சர் எடுக்கப் போகிருரா இல்லையா? இது ஓர் நீண்ட காலப்பிரச்சினை. சுதந்திரம் வந்து நீண்ட காலமாகிய பின்னரும் இன்னும் பழைய கச்சேரி முறையையே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆண்டாண்டு காலமாக பழைய கச்சேரி முறையை மாற்ற நாம் போராடி வருகிருேம். உள்ளூர் நிர்வாகத்துக்கு ஒரு முறையான அமைப்பை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும்"

இவ்விதம் பேசும் போது இராசாங்க அமைச்சர் குறுக்கிட்டு பின்வருமாறு கேட்கிருர்.

The Hon. Minister of State interrupted and asked, "Are you for District Councils?" நீங்கள் மாவட்ட சபைகளை ஆதரிக்கிறீர்களா?

இதற்கு டாக்டர் என். எம். அளித்த பதில்:-

"I am for it. I am hundred percent in favour of District Councils If you do not have District Councils, you cannot

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் காங்கிரஸ்காரர்களின் முகமூடியை கிழித்தெறிகிருர் பண்டிதர் இரத்தினம்!

## பொய்ப் பிரசாரங்களை பொடிப் பொடியாக்குகிருர்!!

கிளிநொச்சித் தொகுதியில் தமிழ் காங்கிரசார் நடத்தும் பொய்ப் பிரசாரங்களையும், சதி முயற்சிகளையும் கிளிநொச்சி பொது நல சங்க தொடக்க விழாவில் உரையாற்றிய திரு. கா பொ. இரத்தினம் பா. உ. கிழித் தெறிந்தார். தமிழ் காங்கிரஸ்காரர்கள் சிங்கள வகுப்புக்கள் நடத்துவதையும், பௌத்த பிக்குகளின் காலடியில் சரணடைவதையும அம்பலமாக்கி அவர்களின் முகமூடியை கழற்றினுர் திரு. இரத்தினம்.

அக் கூட்டத்தில் திரு. இரத்தினம் உரையாற்றிய போது கூறியதாவது:—

'ஓர் ஆட்டை வெட்டாமல்-ஒரு போத்தலைத் திறவாமல்-நான் தேர்தலில் வெற்றிபெற பாடுபட்ட உங்களுக்கு நான் உதவி செய்வதைக் கண்டு எதிர் கட்சியினர் வயிறு எரிவதையும், வாய்க்கு வந்தபடி திட்டுவதையும் நான் பொருட்படுத்த மாட்டேன்.



'நான் செய்யும் தொண்டுகளைக் கண்டு பொருமைப் படும் அரசியல் எதிரிகள் பன்முகமாக என்னை தூற்றுவதை நீங்களே நேரில் காண்கிறீர்கள் உங்களுக்கும் தமிழினத்துக்கும் என்னுல் இயன்ற உதவிகளைச் செய்வதே எனது குறிக்கோளாகும்'.

''எனைய தொகுதிகளிலும் பார்க்க இத்தொகுதியிலேயே காங்கிரசாரின் பொய்ப் பிரசாரமும் துரோகச் செயல்களும் மிகுதியாக நடைபெறுகின்றன. இங்குள்ள மக்கள் ஏழைகள், படிப்புக் குறைந்தவர்கள் இலகுவில்ஏமாற்றிவிடலாம் என்று எண்ணுகிறுர்கள்.

வகுப்புக் கலவரத்தை உண்டாக்கத் தக்க வகையில் சிங்களத்தைப் படிக்குமாறு தூண்டுகிருர்கள். 3 முறை தேர்தலிலே மண் கவ்விய ஆனந்த சங்கரி இங்குள்ள பௌத்த யாத்திரிகர் மடத்தில் சிங்கள வகுப்பைத் தொடக்கி வைத்ததை அறிவீர்கள்;

''பௌத்த பிக்குகளையும் இவர்கள் சரணடைகிருர்கள். இவர்களுடைய ஆட்டம் ஒருபக்கமிருக்க இங்குள்ள பணக்காரர் பலர் தங்களுடைய கையாளாக நான் இருக்காமல் ஏழைகளின் பிரதிநிதியாக இருக்கிறேனென்று உள்ளம் கொதிக்கின்றனர். ஏழை மக்களுக்கு வழங்குவதற்கு வேண்டிய அரசாங்க காணியைப் பிடித்து அனுபவிப்பதற்கு நான் தடையாக இருக்கிறேனென்று ஆத்திரப்படுகின்றனர். மக்களின் சக்தியை இவர்கள் உணர்ந்து அடங்கும் நாள் தூரத்திலில்லை.

''அமைச்சர் திருச்செல்வம் சாவகச்சேரியிலும் திரு. வ. ந. நவரத்தினம் கிளிநொச்சியிலும் நான் ஊர்காவற்றுறையிலும் அடுத்த தேர்தலில் போட்டியிடுவோமெனப் பல பொய்க் கதைகளை வேண்டுமென்றே பரப்புகிருர்கள். இதை நம்பச் சொல்லி உங்களை எதிர்பார்க்கும் அவர்கள் கிளிநொச்சிக்கு காங்கிரஸ் சார்பில் ஆனந்த சங்கரி என்றும் சிவசுந்தரம்என்றும், குமாரசாமி என்றும், முருகேசம்பிள்ளை என்றும், பொன்னம்பலத்தின் மகனென்றும் அடிபடுகிற கதைக்கு என்ன சொல்வார்கள்?

மாணவ ஆசிரியர்கள் தெரிவில் பா. உ. எவரும் எவ்வகையிலும் தலையிடவில்லையென்பதை அழுத்தம் திருத்தமாக கூற விரும்புகிறேன். உண்மை இவ்வாறு இருக்க இங்கே தெரிவு செய்யப்பட்ட பலரை நான் வேண்டுமென்றே நீக்கிவிட்டேன் என்று மூலை முடுக்கெல்லாம் காங்கிரஸ் கூலிப் படை கதை பரப்புவதை நீங்கள் அறிவீர்கள். எனவே எதிரிகளின் பொய் பிரசாரங்களுக்கும் கட்டுக் கதைகளுக்கும் இடம் கொடுக்காமல், நீங்கள் கவனமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.'

---

# ஒருத்திக்கு ஒருவன்

## எமது சிறுகதை

### "தமிழ்வண்ணன்"

மணி நடுநிசி பன்னிரண்டு என்பதை சுவரில் ஒட்டிக்கொண்டிருந்த அந்தக் காலதேவன் அறிவித்துக் கொண்டிருந்தான். மனச் சுமையை மனதில் ஏற்றி மேலும் மேலும் காலத்தையும் நேரத்தையும் வீணுக்க விரும்பவில்லை மைதிலி. அவள் தான் பல வருட துன்ப வாழ்விற்கு விடை காண விழைந்துவிட்டாளே! கருவிழி இரண்டையும் கண்ணீர் வடுருவ ஒரு கணம் விளக்கொளியை வெறித்துப் பார்த்தவள் தான் தொடங்கவிருந்த மறு பயணத்தின் காரணங்களையாவது இவ்வுலக மக்களுக்கு விட்டுப் போக எண்ணியதில் ஆச்சரியமில்லைத்தான்! ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய் எழுத்தாணியைப் பற்றிக் கொண்டவள் மறு கணம் வெண்ணிறமான அந்தக் காகிதத்தில் தன் இருபது வருட கால இதயச் சுமையை இறக்கி வைக்க ஆவல் கொண்டாள். நடுங்கும் அவளது மென் கரங்கள் வெண்ணிறமான அந்தக் கடிதத்தில் ஊர்ந்து செல்லும் முயற்சியில் வெற்றி கண்டது.

அன்பின் அம்மா,

உண்மை எது! பொய்மை எது! நன்மை எது! தின்மை எது! உயர்வு எது! தாழ்வு எது! என்று பகுத்துணர முடியா பண்பற்றவர்கள் வாழும் குருட்டு உலகமிது! உண்மையான, நேர்மையான வாழ்வு வாழ்வதெனின் இந்த பூவுலகில் முடியாத தொன்ருகும். எத்தனைக் கேத்தனை சூதும் வாதும் நிறைந்த போலி வாழ்வை கடைப்பிடிக்கிருர்களோ அவர்களுக்குத்தான் இந்த மாய உலகின் மதிப்பு மிகு ஸ்தானம். இது என் இருபது வருட கால அனுபவம். இந்தப் பாழும் உலகில் பண்பாட்டை பழக்கத்தை மாற்ற என்னெருத்தியால் இயலாதென்பதாற்ருன் நான் என் முடிவை மாற்ற விழைந்தேன்!

பண்புத் தாயே! என் அன்புத்தந்தை எதிர்பாரா விதமாக விபத்தில் சிக்கி இறக்க நாம் அனுதரவாக்கப்பட்டோம் என்பது உண்மை! வாழ வழியற்று வறுமையால் துரத்தப்பட்ட எம்மை இந்த வம்பு உலகம் பார்த்து கண் மூடி மௌனியாகத்தானிருந்தது. ஆதரிக்க ஆறறிவு உள்ள எந்த மனித உயிரும் விழையவில்லை என்பதும் உண்மை தான்! அந்நிலையில் என்னை வளர்க்க எத்தனை பரிதவித்திருப்பாய் என்பதை என்னுல் இப்போ நன்ருக உணர முடிகிறது. தானும் பிள்ளையும் வாழ வேண்டுமென்ற பெரு நோக்கால் நீ ஒரு வழி கண்டுபிடித்தாய். அந்த வழி... ஐயோ...இப்போ அதை எண்ணும் போதே தலை வெடித்து விடுமாப் போலிருக்கிறது. இந்த வழி இத்தனை மாகொடியதென அப்போது என்னுல் உணர முடியவில்லை! அப்படி உணரும் சக்தியிருந்தாற்ருன் அப்போதே உன்னையும் அழைத்துக்கொண்டு எங்காவது குளம், குட்டையில் விழுந்து உயிரை மாய்த்திருப்பேனே!

ஏதோ பலர் வந்தனர்! போயினர்!! எமது வாழ்வும் வளம்பெற்றது. இந்த வாழ்வின் ரகசியங்களை இப்போதானே என்னுல் அறிய முடிகிறது. ஐயோ... இப்படி வாழ்ந்தா என்னை வளர்த்திருக்க வேண்டும்? 'ஒரு குடம் பாலிற்கு ஒரு துளி விஷம்' என்ற மாதிரி என் வாழ்க்கையையும் நீ வாழ்ந்த வாழ்வு களங்கப்படுத்திவிட்டதே! நீ ஏற்படுத்திக்கொண்ட இந்த களங்கத்தை இப் பிறப்பில் எம்மால் அழித்துவிட முடியாதம்மா! நீ தேடிக் கொண்ட இந்த வாழ்விஞல் எம் குடும்பத்திற்கு பாழும் மனிதரால் ஒரு முத்திரை குத்தப்பட்டுவிட்டது. அந்த முத்திரை......!

சேற்றினில் மலர்வது தானே செந்தாமரை. அதனுல் அம் மலரை சேறு பற்றிக்கொள்வதில்லையே! இந்த உண்மையை ஏன் இந்த மனிதர்கள் உணர்ந்தாரில்லை. ஏதோ விதிவசத்தால் ஒருவன் தவறு செய்கிருன். அதற்காக அவனது பரம்பரையையே குற்றவாளிகள் என்று சொல்லிவிட முடியுமா?

நான் சிறுவயதில் பாடசாலைக்குப் போகும் பொழுதும் வரும் போதும் சிலர் முணுமுணுத்துக்கொண்டதும், பாடசாலையில் மாணவிகள் முதற்கொண்டு ஆசிரியை வரை சற்று ஒதுங்கி நடந்தமைக்கும் காரணத்தை இப்போதுதான் என்னுல் உணர முடிகிறது. பாடசாலை விழாக்களில் எனக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படாததும், வகுப்பில் ஒதுக்கப்பட்டமைக்கும் காரணம் இப்போது நன்ருக விளங்குகிறது. அப்போதெல்லாம் ஒன்றையும் பொருட்படுத்தாமல் படித்தேன். பயன் பெற்றேன். ஒருவாறு க. பொ. த. வும் சித்தியடைந்தேன். இப்போதுதான் இந்தப் படிப்பை ஏன் படித்தோமென்று எண்ணத் தோன்றுகிறது. இந்தப் படிப்பால் எனது குடும்பக் களங்கத்தை களைந்துவிட முடியவில்லையே! அதற்காகத்தான் அந்தப்படிப்பையும் வெறுத்தேன்.

இப்போதெல்லாம் நான் பால் மணம் மாருப் பாலகனல்ல! பருவமங்கை!! எதையும் உணர்ந்து எடைபோ[illegible] என் தாய் இழைத்து[illegible] களங்கமான வாழ்வின் அத்தியாயத்தை என் புனித வாழ்வால் நீக்கி பிராயசித்தம் தேட கங்கணம் கட்டியிருந்தேன்! ஆனுல் முடியவில்லை. நான் கொண்ட இந்த எண்ணம் தங்கப் பெட்டிக்குள் பித்தளையைப் போட்டு தங்கமாக்கும் வீண் முயற்சி என்பதை இப்போது நன்ருக உணர்ந்து கொண்டேன். ஆகவே அந்த முடிவையும் மாற்றிக் கொண்டேன்.

நான் பாதையில் போகும் ஒவ்வொரு வேளையும் இளம் காளைகள், ஏன் கிழம் தட்டிய கிழடுகளும், எத்தனையோ பிள்ளையரின் தந்தையரும் கூட பார்க்கும் பார்வை......அப்பப்பா......அசிங்கமான அந்தப் பார்வையின் ரகசியத்தையும் என் மனம் எடை போடத் தவறவில்லை. என் காதில் படும்படியாக அழகின் அவதாரம் என்பர் சிலர்! அந்தரலோக அப்சரஸ் தேவதை என்பர் சிலர்!! இன்னும் எத்தனையோ புகழ் மாலைகள்!!! எல்லாம்......1 காமப் பித்தர்களின் கனி மொழிகள் என்பதை அறியாதவளா...? என்ன! ஏனென்றும் கேட்பதில்லை. ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. ஒருத்திக்கு ஒருவன் என்ற பைந்தமிழ் பண்பாட்டிற்கிணைய வாழ கனவு கண்டவளல்லவா நான்! ஆனுல் குருட்டு உலகம் இதை உணர்ந்தாற்ருனே! தாயின் வழியே சேயின் வழி 'தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை' என்ற கருத்துடனேயே என்னையும் நோக்கினர்.

ஒவ்வொரு ஆண்மகனும் என்னைத் தப்பெண்ணத்துடனேயே எடைபோட்டுக் கொண்டான். கற்பின் வழி நின்ற என்னையும், காமவழி நின்ற கன்னி என்றே எடை போட்டுக் கொண்டனர். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? என்ற எண்ணம் எங்கள் சுற்றுடல் ஆண்மக்களின் மனதில் சுடர் விட்டிருந்ததென்பதை அவர்களது சொற்களும், பார்வையுமே காட்டித்தந்தன.

நாட்செல்லச்செல்ல பார்வையில் காலத்தை கடத்தியவர்கள் கேலிக்கதைகளை சிரிப்புடன் கலந்து என் செவிப்பறையில் மோத விட்டு வேடிக்கைப் பார்க்கவும் தவறவில்லை. எல்லாம் ...வெறும் நடிப்பு! இன்னும் என்னென்னவோ...? அவை என்ன என்பதை உங்களால் உணரமுடியாதா என்ன: எல்லாம் தாய் கமலத்தைக் கண்டால்... சரி... இதுவும் காமுகர் தொடுத்த சொல் அம்புகளில் ஒன்று என்பதை சொல்லவும் வேண்டுமா?

அன்புத்தெய்வமே ... நீங்கள் இட்டுக்கொண்ட இந்த பொல்லா மறுவை இந்த ஜென்மத்தில் அழித்து விட முடியாது. அது சாகாவரம் பெற்றதொன்ருகும்! நான் கற்பினுக்கு களங்கம் ஏற்படுத்தா கன்னி என்று ஒத்துக் கொள்ள இந்த குருட்டு உலகம் முன் வராது என்பதை நிதர்சனமாய் புரிந்து கொண்டேன். இனியும் என் கற்பின் மகத்துவத்தை எடுத்துக்காட்ட நான் இந்த

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபரப்புக் கூட்டரவிலும் சிங்களக் கெடுபிடி!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டரவில், தனிச் சிங்களக் கெடுபிடி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தமிழ் பொது மக்களிடமிருந்து பல மான புகார் வந்துள்ளது. தமிழ் மொழி விசேட விதிகள் சட்டத்தை ஒலிபரப்புக் கூட்டரவு முற்று முழுதாக புறக்கணித்து நடந்து வருவதாக தெரிகிறது.

மாகாண நிருபர் பதவிக்கு ஒலிபரப்பு கூட்டரவு விண்ணப்பங்கள் கோரியிருந்தது தெரிந்ததே. இதற்கான நேர்முகப்பரீட்சை சென்ற வாரம் நடைபெற்றது. இப்பதவிக்கு விண்ணப்பித்தவர்களை நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அனுப்பிய கடிதம் தனிச்சிங்களத்திலேயே எழுதப் பட்டிருந்தது. வட மாகாணத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு கூட தனிச்சிங்களத்திலேயே அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டதென்றும், பலர் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதை விளங்கிக் கொள்ள முடியாததால், நேர்முகப்பரீட்சையில்கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்தார்கள் என்றும் சொல்லப் படுகிறது.

ஒலிபரப்புக் கூட்டரவின் இச் செயல் தமிழ் மக்களிடையே ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது.

## மாவட்டசபையை..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

get rid of the Kachcheri system in these areas."

'நான் அதை ஆதரிக்கிறேன். மாவட்ட சபைகளுக்கு நூற்றுக்கு நூறு வீதம் ஆதரவளிக்கிறேன். நீங்கள் மாவட்ட சபைகளை நிறுவாவிட்டால், இந்நாட்டில் கச்சேரி முறையை உங்களால் ஒழித்துவிட முடியாது'

இவர்கள் தான் மாவட்ட சபை எதிர்ப்பாளர்களாக இன்று நாட்டில் உலாவி வருகிறார்கள்!

# தமிழரசுத் தலைவர்களை பொது மேடைக்கு ஜீ. ஜீ. அழைப்பதன் மர்மம் என்ன?

ஆவரங்காலில் நடைபெற்ற தமிழ் மகா சபையின் கூட்டமொன்றில் திரு. பொன்னம்பலமும் வவுனியா பா. வும் பொது மேடை பற்றிப் பேசினார்கள். போதாக்குறைக்கு சவால்கூட விட்டார்கள். பொன்னரின் வாலிபச் சிடன் சுந்தரலிங்கம் முன்பு விட்டசவால் என்னவாச்சு?

தளபதி அமிர்தலிங்கம் பருத்தித்துறைக் கூட்டத்தில் சுந்தரலிங்கத்தின் சவாலை ஏற்றார். மேலும் அமிர் 'சுந்தரரல்ல அவரது குரு பொன்னருடன்' கூட அவர்கள் அமைக்கும் மேடையிலே மாவட்ட சபைபற்றி பேசத் தயார்' என்று கூறினார்.

நடந்தது என்ன? பொன்னர் கும்பல் மூலைக்குள் ஒதுங்கியது. நடந்தவற்றை மறந்து இவர்கள் சவால் விடுவது என்போன்ற இளைஞர்கட்கு சிரிப்பாகிவிடுகிறது.

இன்று பொன்னர் பொது மேடை பற்றி பேசுவதற்குக் காரணம் ஒன்றிருக்கிறது. அவரின் பொது மேடைக்கு இன்றைய சூழ் நிலையில் தமிழரசார் உடன்படக் கூடாது.

பொதுமேடையில் விவாதம் நடந்தால் சில முடிவுகள் தெரியும். (1) தமிழரசார் மாவட்ட சபையினால் தமிழருக்கும் ஈழத்துக்கும் வரக்கூடியநன்மைகளை நன்கு எடுத்துக் காட்டுவர். (2) பொன்னர் முகத்தில் கரி பூசப்படும். (3) அதேவேளையில் தென்னிலங்கையில் இனக் கிளர்ச்சிகளும் மாவட்ட சபை எதிர்ப்பு இயக்கங்களும் தோன்றி மாவட்ட சபை வரமுடியாத நிலை ஏற்படும்.

எனவே பொன்னர் செ-ப உடன்படிக்கையைப் போல் இன்றும் மாவட்ட சபை வராது தடுப்பதற்கு முயற்சி எடுக்கிறார்.

1965க்குப்பிறகு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட — நிறைவேற்றப்படவிருக்கும் மசோதாக்களியும் அந்த மசோதாக்களை ஆதரித்துள்ளனரே.

தேசிய அரசாங்கத்தினால் தமிழர்கள் விடயத்தில் பிரதிபலிக்கும் நன்மைதிமைக்கு தமிழரசார் எவ்விதம் பொறுப்புடையவரோ அவ்

## மக்கள் குரல்

னால் தமிழருக்கு தீங்கு வந்தால் தமிழரசார் தான் பொறுப்பு என்கிறார்கள். ஏன் பொன்னர் கோஷ்டி வாறே பொன்னர்கட்சியினரும் பொறுப்புடையவராவர். இதனை நாம் நன்கறிவோம்.

வாசன்,
அச்சுவேலி.

# தொடந்து லக்சலவா? அன்றி ஈழச்சாலையா?

கடந்த சில மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் உள்நாட்டு உற்பத்திப் பொருள் விற்பனை நிலையம் ஒன்று 'லக்சல' என்ற சிங்களப்பெயரில் உள்நாட்டு மந்திரியால் திறந்து வைக்கப்பட்டது யாவரும் அறிந்ததல்லவா? ஆனால் அதிகமான தமிழ்மக்கள் வாழுகின்றதும் தமிழ் நாட்டுத் தலைநகரம் எனக் கூறக் கூடியதுமாகிய யாழ் நகருக்கு 'லச்சல' என்ற சிங்களப்பெயரில் அந்நிலையம் அமைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களுக்கு மிகவும் அதிருப்தியைக் கொடுக்கக் கூடிய ஒரு, விடயமாகும். ஆகவே அதற்கு உள்நாட்டு உற்பத்திப் பொருள் நிலையம் என்றோ அல்லது 'ஈழச் சாலை' என்றோ அல்லது வேறு எந்த பொருத்தமான தமிழ் பெயர் கொண்டோ மாற்றியமைப்பது மிகவும் அவசியமாகும்.

இனிமேலாவது அப்பெயரை தமிழ் பெயராக மாற்ற வேண்டும். அத்தோடு இனிமேல் தமிழ்ப்பிரதேசங்களில் திறக்கப்படவிருக்கும் ஒவ்வொரு நிலையங்களுக்கும் தமிழ்ப் பெயரையே சூட்ட வேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட தமிழ்த்தலைவர்கள் உரிய நடவடிக்கையின் மூலம் நிறைவேற்றி வைக்க வேண்டும். தொடர்ந்து 'லக்சலவா' அல்லது இனிமேலாவது 'ஈழச்சாலை' என தமிழ்ப் பெயர் ஒளி பெறுமா?

[illegible] ஜோதி,
கொழும்பு-14.

## ஒருத்திக்கு ஒருவன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாத்திரையை மேற்கொண்டால் அன்றி வேறு வழியில்லை.

கோடையில் வீசும் குளிர் நிலவு! ஓடையில் வீசும் குளிர்த்தென்றல்! செல்வனை ஆட்கொண்ட இன்பம்! ஏழையைப்பீடித்த துன்பம்! ஏன்...இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள் மாறி, மாறி அழியும் போது நீ தேடி சூடிக் கொண்ட 'விலைமள்' என்ற மலரை எந்த சக்தியாலும் கருக்கிவிட முடியாது என்பதை தெள்ளத் தெளிய அறிந்து கொண்டேன். உன் போன்ற தாயின் அறியாப்புரியா ஒழுக்கையினால் தேடிக் கொண்ட இந்த அவச் செயலினால் பிற்சந்ததியினர் எத்துணை அதல பாதாளத்தில் தள்ளப்படுகின்றனர் என்பதை சிந்தித்துப் பார்! எமது வாழ்வு எதிர்கால பெண்மைக்கு ஒரு வழிகாட்டியாக ஆசானாகவாவது இருந்தால் அதுவே போதும்!

காகக் கூட்டில் இருந்து வெளிவரும் எல்லாமே காகக்குஞ்சுகள் என எண்ணித்தப்புக் கணக்குப்போடும் சமூகமாவது திருந்த எனது இறப்பு வழிவகுக்குமேயானால் நான் இந்த இறப்பில் அடையும்இன்பத்திற்கோர் எல்லையில்லை!

மனிதனை மனிதனால் மதிக்கும் உலகத்தில் தான் என் போன்ற அபலைகள் ஆறுதலடைய முடியும். அந்த உயரிய உலகம் இங்கில்லை! அது ...இன்னும் சில வினாடிகளில் எனக்குக் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு! என் மரணத்திற்கு யாரும்காரணமல்ல என்று கூறி... ஏன் சமூகம் தான் காரணம்என்றுகூறினால் சமூகத்தையே அழித்து விடுமா சட்டம் ... அன்பு முத்த மூட்டிய அன்னையிடமும் ஏன் பூவுலகத்திடமும் விடை பெற்றுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
வாழக்கிடைக்காத
மைதிலி.

எழுதி முடித்த அந்தக்கடிதத்தை திருப்பி படிக்க கூட முயலவில்லை. அதில் கருத்து பிழையிருக்காதென்ற நம்பிக்கை! அதை அப்படியே மடித்து வைத்து விட்டு இருளுடன் இருளாய்கலந்து விட்டாள்.

சிறிது நேர தத்தளிப்பின் பின்னர் எங்கோ ஒரு பாழுங் கிணற்றில் ஒரு பறவை அமைதி கொண்டது!!!

(யாவும் கற்பனை)

## நவரத்தினம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பக்கத்தில் வெளியிட்டதும், அப்படத்தில், திரு. நவரத்தினத்துடன் புன்முறுவல் பூக்க தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் நிர்வாகச் செயலாளர் திரு. க. சிவானந்தசுந்தரம் காட்சி தருவதும், மேற்படி செய்திகளை ஊர்ஜிதம் செய்கின்றன.

## வானம் பாடி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிமா அம்மையார் அண்மையில் களனியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

''தேசிய அரசாங்கம் வந்த பின்னர், இந்நாட்டில் தி. மு. க, நடவடிக்கைகள் அதிகரித்து விட்டன. இதைத் தடுக்காமல் இருக்கிறது தேசிய அரசாங்கம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், இ. தி. மு. க. காரர்களின் வாலை ஒட்ட நறுக்கி விடுவோம்'' என்று கூறியிருக்கிறார்.

முன்பு அப்படியே செய்தவர்தானே! அதை மறந்து சிறிமாவின் சேலைத் தலைப்பைப் பிடிக்க இன்னும் முயன்றால் அது தங்கள் கல்லறையைத் தாங்களே தோண்டுவதன்றி வேறென்ன?

## எதிர்கட்சிகளின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுலபமாகி விடுமென அரசாங்கம் நம்புவதாகவும் குறித்த பேச்சாளர் தெரிவித்தார்.

வெள்ளை அறிக்கை மீது இக்கூட்டத் தொடரில் முழு அளவில் விவாதம் நடைபெறுமென்றும், அடுத்த கூட்டத் தொடரில் அரியணை உரையை அடுத்து மா. சபை மசோதா சமர்ப்பிக்கப்படுமென்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தமிழ் துறைக்கு மூடு விழா

கொழும்பு பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ்த் துறையை மூடுவதற்கு பல்கலைக் கழகத்தின் தலைமைப் பீடம் இப்பொழுது இரகசியமாக ஆலோசித்து வருவதாக தெரிகிறது.

இந்த நோக்குடன்தான், கொழும்பு பல்கலைக் கழகத்தின் தமிழ் துறை பேராசிரியர் பதவிக்கு இது வரை எவரும்நியமிக்கப்படவில்லை யென்று கூறப்படுகிறது.

கொழும்பு பல்கலைகழகத்தில் தொடர்ந்து தமிழ்த் துறையை நீடிப்பதற்கு போதிய அளவு தமிழ் மாணவர்கள் இல்லை யென்ற சாட்டை முன்வைத்தே முடுவிழாநடத்த ஆலோசனை நடக்கிறதாம்.


## ஓர் அறிவிப்பு

நூரளை மக்களே!

நூரளையில் நீங்கள் சுதந்திரன்
வாங்க வேண்டிய இடம்.

கணேசர் ஸ்டோர்ஸ்,
நியூபசார் வீதி
நூரளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரளத்தில் காங்கிரஸ் எப்படி வென்றது?

கேரள மாநிலத்தில் அண்மையில் நடைபெற்ற நகர மன்றத்தேர்தல்களில் மிகப்பெரிய வெற்றியீட்டியிருக்கிறது இந்திய தேசிய காங்கிரஸ். கடந்த சட்ட மன்றப்பொதுத்தேர்தலில் ஆக 9 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று படுதோல்வியடைந்த காங்கிரசு மீண்டும் எப்படித் தலை தூக்கியது?

விரைவில் தமிழ் நாட்டிலுள்ள நகரமன்றங்களுக்கு தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. தமிழ் நாட்டிலும், கேரளத்தின் முடிவு எதிரொலிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் திரு. கருத்திருமன்.

கருத்திருமன் கனவு பலிக்குமா? காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகள் தலைதப்ப என்ன செய்ய வேண்டும்?

கேரள மாநிலத்தில் உள்ள நகரமன்றங்களுக்கு நடந்த தேர்தலிலே காங்கிரஸ் கட்சிக்கு அதுவே எதிர்பாராத அளவுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது- கடந்த பொதுத் தேர்தலிலே கேரள சட்டமன்றத்திற்குள்ள 133 தொகுதிகளிலே அத்தனை தொகுதிகளுக்கும் போட்டியிட்டு ஒன்பதே தொகுதிகளில் தான் கேரள மாநில காங்கிரஸ் வெற்றிபெற்றது. அதனுடன் ஒப்பிடும்போது தற்போது நகரமன்றங்களில் அதற்குக் கிடைத்தது மகத்தான வெற்றிதான்.

கேரள நகரமன்றங்களுக்கான தேர்தல்களின் முடிவு கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் வாக்காளர்கள் அடைந்துள்ள மனமாற்றத்தைக் காட்டுவதாகவே நாமும் கருதுகின்றோம். இதனை ஒப்புக்கொள்ளக் கூட்டணியினர் வெட்கப்படத் தேவையில்லை.

இதற்கு அடிப்படைக்காரணமென்ன? கேரள வாக்காளர்கட்கு, காங்கிரஸ் கட்சி மீது, பொதுத் தேர்தலுக்குப் பின்பு — நல்லெண்ணம் ஏற்பட்டிருப்பதாக நாம் நம்பவில்லை. மாறாக கூட்டணி ஆட்சியின் சாதனைகளிலே மன நிறைவு ஏற்படவில்லை என்றே நாம் கருதுகின்றோம்.

### அதிகாரமில்லையே

காங்கிரஸ் ஆட்சி நடந்த காலத்திலே கேரள இடதுசாரிக்கட்சிகள், வாக்காளர்களுக்கு அளவுக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் தாங்கள் பெற்றுள்ள ஆற்றலுக்கும் அதிகமாக உறுதி மொழிகள் தந்தன. ஆட்சி பீடத்தில் ஏறிய பின்னர் அந்த உறுதி மொழிகளை நிறைவேற்றி வைக்கும் ஆசையும் ஆர்வமும் அவர்களுக்கு இருப்பினும், அரசியல் அமைப்புச் சட்டபடி அவர்களுக்கு போதிய அதிகாரமில்லை.

இது கேரளத்திற்கு மட்டுமல்லாமல், தி. மு. க. ஆட்சி நடைபெறும் தமிழகத்திற்கும் உண்டு: தொடர்ந்து

### ஒரு உண்மை

கேரளத்தில் ஏற்பட்டிருக்கும் சரிவு தமிழகத்திலும் தொடரக் கூடுமென்று கனவுகாண்கின்றார் எதிர்க் கட்சித்தலைவர் திரு. கருத்திருமன். இது வெறும் ஒப்பாசை என்பதனை நாமும் ஒப்புக்கொள்கின்றோம் கேரளத்தின் நிலை வேறு, தமிழகத்தின் நிலை வேறு-என்று உறுதியாக சமாதானம் சொல்லி விட முடியும்: சுக்கு நேரடி அதிகாரமில்லை. அதிகாரம் படைத்துள்ள மத்திய அரசுக்கோ தவிர்க்க வேண்டுமென்ற எண்ணமில்லை. இதிலுள்ள அரசியல் சட்ட பூர்வமான நுணுக்கத்தை கோவைப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் அறிந்திருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது, மில்கள் மூடப்படுவதை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டம் நடத்தப் போகிறார்களாம்: அப்

## காங்கிரஸ் அல்லாத அரசுகள் தலைதப்புவதற்குவழியுண்டா?

இரண்டாண்டுகள் தி. மு: கழக ஆட்சி மக்களுடைய அதிருப்தியை பெருத அளவில் எப்படியோ இரண்டு பட்ஜெட்டுகளைத்தயாரித்து விட்டது. ஆனால், இனி வரும் ஆண்டுகளில் நிலைமை என்ன? புதிய வரி எதுவும் போடாதநிலை அடுத்த ஆண்டுகளுக்கும் தொடர்ந்தால் மக்கள் எதிர்பார்க்கும்புரட்சிகரமான தேவைகளைப் பூர்த்தி செய்ய பணத்திற்கு எங்கே போவது?

ஆனால், ஒரு உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. மாநிலங்கள் பூரணசுயாட்சிபெருதவரை காங்கிரஸ் அல்லாத மாநில ஆட்சி எதுவும் வாக்காளர்களைத் திருப்திப் படுத்திவிட முடியாது.

### தர்மசங்கட நிலை

கோவையிலே பஞ்சாலைகள் மூடப்படுகின்றன. அதனைத் தவிர்க்க தமிழக அரபடி நடத்தினுல், சட்டத்தையும் அமைதியையும் காக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசிடமே இருக்கிறது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றப் புகுந்தால், தொழிலாளி வர்க்கத்தின் வெறுப்புக்கு இரையாகும் தி. மு. க. அரசு. நிறைவேற்ற மறுத்தாலோ, அரசியல் சட்டம் முறிக்கப்பட்டு விட்டதாகக் காரணம் காட்டி ஜனதிபதி ஆட்சியை திணிக்க முயலும் மத்திய அரசு.

### தலைதப்ப வழி

கோவையில் மில்கள் மூடப்படுவதனை எதிர்த்தும், வேலை இழக்கும் தொழிலாளரிடம் அனுதாபம் காட்டியும், மத்திய அரசின் மீது பழிபோடாமல் நிலைமையைச் சமாளிக்க மாநில அரசே பொறுப்பேற்க வேண்டுமென்றும் விழுப்புரத்தில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. காங்கிரஸ் அல்லாத மாநில அரசு ஒவ்வொன்றுக்கும் இது போல சிக்கல்கள் இருக்கின்றன. எப்படியோ இட்டுக் கட்டிக் கொண்டு காலந்தள்ள முயலாமல், மத்திய அரசின் ஆதிக்கத்தை எதிர்த்தும், மாநிலங்களுக்கு சுயாட்சி கோரியும் போராட்டம் நடத்த காங்கிரஸ் அல்லாத மாநிலங்கள் ஒன்று கூடி திட்டமிட வேண்டும். தலைதப்ப இதைத் தவிர வேறு வழியில்லை.

(செங்கோல்)

---

# அண்ணுவுக்கு சவால் விட உங்களுக்கு என்ன தகுதி?

## சுப்பிரமணியத்துக்கு நாவலரின் சூடானகேள்வி!



"ஆறு சட்டமன்றத்தொகுதி மக்களால் - ஏறத்தாழ 86 ஆயிரம் மேலதிக வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர் அண்ணுவா கொல்லைப்புற வழியால் பதவிக்கு வந்தவர்? இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தால் தோற்கடிக்கப்பட்ட சுப்பிரமணியமா அண்ணுவுக்கு அறைகூவல் விடுவது? இவ்வாறு சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய நாவலர் நெடுஞ்செழியன் கேட்டார்.

அறிஞர் அண்ணு கொல்லைப்புற வழியால் முதலமைச்சர் பதவிக்கு வந்தவரென்றும் துணிவிருந்தால் தென்காசித் தொகுதிக்கு அண்மையில் நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிட அண்ணு முன் வரட்டும்என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் சவால் விட்டிருந்தார். அந்தச் சவாலுக்குப் பதிலளித்து நெடுஞ்செழியன் மேலும் கூறியதாவது:-

திரு. சுப்பிரமணியம் பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைவராக அமைச்சராக - அமெரிக்கா சென்று திரும்பியவர். அப்படிப்பட்டவர் அண்ணுவைப் பார்த்துக் கேட்கிறார் அண்ணுத்துரையே நீங்கள் உண்மையான ஜனநாயக வாதியாக இருந்தால் தென்காசித் தொகுதியில் நிற்க முடியுமா என்று சவால் விடுகிறார். யார் யாருக்குச் சவால் விடுகிறார்? தென் சென்னைத் தொகுதியில் 86 ஆயிரம் வாக்கு வேறு பாட்டில் காங்கிரசை வீழ்த்திய அண்ணுவுக்கு கோபிச் செட்டிப் பாளையத்தில் தோழர் சாமிநாதனிடம் ஒருலட்சம் வாக்குகள் வேறு பாட்டில் தோல்வியுற்று ஓடிய சுப்ரமணியம் சவால் விடுகிறார்.

பொள்ளாச்சித் தொகுதியில் உடுமலை நாராயணன் நிற்கிறார்என்று கேள்விப்பட்டதும் முன்பு தான் வெற்றி பெற்ற அதே பொள்ளாச்சித் தொகுதியில் நிற்கப் பயந்து ஓடிய சுப்ரமணியம் அண்ணுவுக்குச் சவால் விடுகிறார்.

எங்கே நின்றாலும் சி. சுப்ரமணியத்தைத் தோற்கடிப்பேன் என்று உடுமலை நாராயணன் அறிக்கை விட்ட போது கூட உடுமலை நாராயணன் என்ன? அந்த வைகுந்த நாராயணனே வந்தாலும் வெற்றி பெறுவேன் என்று மார்தட்டியவர்தான் சுப்ரமணியம். [illegible] ஆனால் அந்தத் தொகுதியை விட்டு கோபிச்செட்டி பாளையத்திற்கு ஓடிவிட்டார்.



அங்கே புளியம்பட்டி சாமிநாதன் அவரை எதிர்த்தார் சாமிநாதனுக்குக்கூட கொஞ்சம் பயம் இருந்தது. மந்திரியாக இருந்தவராயிற்றே இவரை வெல்ல முடியுமா என்று? பிறகுதான் தெரிந்தது சுப்பிரமணியத்தைத் தோற்கடிக்க தன்னைப் போன்ற ஆள் கூடத் தேவையில்லை சாதாரணத் தொண்டனே போதுமென்று!

அப்படிப்பட்ட சுப்ரமணியம்தான் அண்ணு பதவிக்கு வந்தது கொல்லைப்புற வழியென்று கூறுகிறார்?

ஆறு தொகுதி மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் அண்ணு பதவிக்கு வந்தது கொல்லைப்புற வழியென்றால் இலட்சுமணசாமி முதலியார், சேஷாத்திரி, முத்தையாச் செட்டியார், மாணிக்க வேலர் போன்றவர்கள்வந்தது கொல்லைப்புற வழியா? மேலவை உறுப்பினர்களாக இருக்கும் 78 பேரும் கொல்லைப்புற வழியில் வந்தவர்களா?

அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும் டாக்டர் அம்பேத்காரும் எழுதி நேர்வழி கொல்லைப்புற வழியென்று ஜனநாயகத்தில் இரண்டு வழி வைத்திருக்கிறீர்களா? அப்படி வைத்திருந்தால் அது நீங்கள் வகுத்த வழியா நாங்கள் வகுத்த வழியா? படித்தறிந்த சுப்பிரமணியம் அவர்கள் இதற்கு விளக்கம் சொல்ல வேண்டாமா?

வெங்கட்ராமன் 10 வருடங்களாக இருந்தாரே அவரும் கொல்லைப்புற வழியில் வந்தவர்தானு? சாதாரண மனிதன் இப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லலாம். பொறுப்புள்ள இடத்தில் இருக்கும் சுப்பிரமணியம் சொல்லலாமா?

ஜனநாயக நாட்டில் ஜனநாயக வாதிகள் 'நான் படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்பார்களா? இது யார் சொல்வது? காட்டு ராஜாவாகஇருக்கும் சர்வாதிகாரி சொல்லும் வார்த்தை அந்த சர்வாதிகாரி இப்போது என்ன ஆனுர்? மக்கள் மன்றம் நினைத்தால் எதுவும் செய்யலாம். எங்களை இறக்கவோ ஏற்றவோ மக்களால் முடியும். ஆனுல் காங்கிரஸ் காரர்களால் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அத்தியாயம் 18

## மாயக் குளிகைகள்

எதிர் பாராத வேளையில் இன்பமோ துன்பமோ மனிதனைக் குழப்பமடையச் செய்யும் அசுர சக்திபடைத்தவை. அந்த வகையில் பாஸ்கருக்கு ஏற்பட்ட விபத்து என்னவாயிருக்கலாம் எனக் குழம்பினுள் கீதா. கீதாவினுடைய மனம் அந்நிலையில் துடி துடித்தது. டாக்டருடைய கையை இறுகப் பிடித்துக்கொண்டாள். டாக்டர் ஒளிப்பதிவுக் கருவியின் சுவிட்சைத் திருகி நிறுத்தினுர். கீதாவை அணைத்துக்கொண்டார். 'பயந்துவிட்டாயா? கீதா என்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாந் தானே?' என்ருர்.

'ஆமாம்' என்ருள் கீதா. அவள் குரல் வரண்டுபோயிருந்தது. பயங்கரம் நிறைந்த ஆங்கிலப்படம் பார்க்கும் குழந்தைப் பிள்ளை போல மிரண்டு கொண்டிருந்தாள் கீதா.

'கீதா! கீதா! நீ குழந்தை உள்ளம் படைத்தவளாணுலும் அறிவுள்ளவள். நான் தயாரித்து வைத்த குளிகைகள் உண்மையில் அசுர குணம் வாய்ந்தவை. அது எனக்கு ரிஷி ஒருவரால் கொடுக்கபபட்ட தென்பது முழுப்பொய். என் சிந்தனையில் பிறந்த குழந்தைகளே அந்தக் குழிகைகள்! அவைகளை நான் தயாரித்தது என்னை என் மனைவி கொல்ல எத்தனித்தால், அவளும், அவள் உதவியாளனும் கொலை செய்யப்படுவார்கள் என்று நானே அவற்றைத் தயாரித்தாலும் அவர்களை நான் கொலை செய்யவில்லை. தாங்களே விரும்பி உண்டு தற்கொலை செய்ய விரும்பினர்.

ஒருவனுடைய பொருளைக் களவாடியது முதற் குற்றம். அதைத் தானுண்டு உயிர் வாழ நினைப்பது அதைவிடக் குற்றம்: பச்சைக் குளிகை கொஞ்சங் கொஞ்சமாகவே அவளை வதைக்கும். சிவப்புக் குளிகை உடனடியாகப் பலன் கொடுக்கும். உடம்பு முழுவதும் உள்ள நரம்பு சுண்டி இழுத்து வலிக்கச் செய்யும். நிமிடத்துக்கு நிமிடம் உட்கொண்டவனைச் சித்திரவதை செய்யும், அது மட்டுமல்ல உட்கொண்டவனைப் பேசும் சக்தி இழக்கச் செய்துவிடும். அதே கதி தான் பாஸ்கருக்கு நடந்தது.' என்று கூறிவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

'இதனுல் உங்களுக்கு பழி வந்து சேருமே டாக்டர்' கீதா குழந்தைப் பிள்ளை போலக் கேட்டாள்.

கீதா.. கீதா! நீ புத்திசாலி தான். ஆனுல் உலகத்தை அளக்கும் கருவி உன்னிடம் இல்லை. மாற்ருன் மனைவியை விரும்புவது; அவளுடன் போகம் செய்வது, அது மட்டுமா? அவள் கணவனைக் கொலை செய்யும்படி தூண்ட உடந்தையாய் இருப்பது, அவன் தனக்கென வைத்த பொருளைக் களவாடுவது அவனுடைய லட்சக்கணக்கான பொருளைக் களவாடுவது, இவைகள் பாவம் இல்லை? பழியில்லை? என்னுடைய நெற் குதரைப் பழி வாங்குகிறதே என்பதற்காகப் பொறி வைத்து எலி பிடிக்கிறேன். அது பழியாயிருக்கலாம். ஏனெனில் அதற்குக் கவர்ச்சியூட்டி ஏதும் அனுப்புச் செய்து வரவழைக்கிருேம். இவை என்னைக் கொல்ல வந்த விஷப் பூச்சிகள். இவைகளை நான் கொல்லவில்லையே. தாமாக நஞ்சுண்டு கொண்டனர்.' என்று கூறிவிட்டு 'மிகுதியையும் கேள் கீதா' என்று ஒலிப்பதிவுக் கருவியை முடுக்கிவிட்டனர்.

'பாஸ்கர் என்ன நடந்தது?' மல்லிகாவின் குரல்.

'நரம்புகளை வலிக்கிறது. மோசக்காரன் டாக்டர்'

என்று பதறும் பாஸ்கரின் குரல்.

'முட்டாள்களே! என்னைக் கொலை செய்துவிட்டு இளமைமாருதிருக்க முயல்கிறீர்களா? கனவு! வெறும் பகற் கனவு!! மோசக்காரி! கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்தாய். என்ருவது நல்லவளாக மாறிணுலும் மாறுவாய்; என்னை வைத்துக் கொண்டே கள்ளக் காதல் செய்து கொண்டாலும், கொலை செய்ய மாட்டாய் என நினைத்தேன். நீ கொலைகாரி! கொலைக்கு நீ மட்டுமல்ல உன் கள்ளக் காதலன் கூட உடந்தை! என்னை எதிர்த்து உயிர் வாழ முடியாது மல்லிகா. உன்னை என்னுயிராக மதித்ததற்கு

நீசெய்த மரியாதை என் மரணத்தின் மீது நின்று காமக் களியாட்டம். உன் கள்ளக் காதலன் சொரிந்த அன்பு வார்த்தைகள் முடிந்துவிட்டன. அவனுக்கு இன்று அல்லது நாளை! ஆனுல் உனக்கு...? ஆரம்பத்தில் உன்னை எச்சரித்தும் என்னைக் கொலை செய்ய முயன்ருய். இருவருமே தற்கொலை செய்துகொண்டீர்கள். மல்லிகா! டாக்டர் நான். ஹ...ஹ...ஹ'. அறையே அதிரும் வண்ணம் பேய்ச் சிரிப்பு. ஒலிப்பதிவுக் கருவியை நிறுத்தி வைத்தார் டாக்டர்.

'பின்பு மல்லிகா எதுவும் பேசவில்லையா டாக்டர்?' என்று ஆவலுடன் கேட்டாள் கீதா.

'பேசினுள். அவள் உள்ளம் துடித்தது. உடலும் துடித்தது. 'பாஸ்கர்' என்ருள். பாஸ்கர் பேசும் சக்தியை இழந்து பேப்பே...' என்ருன். கைகால்களை முறுக்கிக் குழறினுன். 'ஐயோ.. பாவி.' என்னை ஏசினுள் மல்லிகா. அதற்கு மேலும் பொறுமையைக் கடைப்பிடிக்க விரும்பாத நான் எழுந்தேன். இருவரும் திகைப்புற்றனர். பாஸ்கர் ஓட முயன்ருன். கதவுச் சாவியை நான் எடுத்துக் கொண்டேன். அதன் பின்பு ஒலிப்பதிவுக் கருவியை நிறுத்திவிட்டேன். அதற்கு இணைத்து சுவிச்சுடன் மற்ற ஒலிப்பதிவுக் கருவி, புகைப்படக் கருவி யாவும் இணைக்கப்பட்டிருந்தன.

மல்லிகா! நன்றி கெட்ட நாயே என்னைக் கொலை செய்ய முயற்சித்தாயே என்று உள்ளத்தில் கொதித்தெழுந்த அசுர உணர்வினுல் அவள் கன்னத்தில் 'பளீர்' என அறைந்தேன்.

அவள் நிலத்தில் தடால் என விழுந்தாள். அதேவேளையில் என்னுள்ளத்தில் விசித்திரமான ஒரு ஆசை தோன்றியது. பாஸ்கருக்குக் கொடுத்த நஞ்சுக்குளிகை உடனடியாக அவனைக் கொலைசெய்யாதிருக்க ஒரு மாற்று மருந்து கொடுத்தேன். அவன் உடலில் ஏற்பட்ட வலிப்பு அப்படியே தானிருந்தது.

மல்லிகா மயக்கம் தீர்ந்து எழுந்தாள். அவள் தன் பொன்னுடலை வெளிச்சத்தில் எனக்கு என்றுமே காட்டியதில்லை. அப்படிப்பட்டவள் பாஸ்கரோடு பகலில் நிர்வாணமாய் நின்றதைப் பார்த்த நாள் முதல் அவளை அவமானப்படுத்தவேண்டும் என்று எண்ணினேன்.

உடனே அவளது ஆடைகளையெல்லாம் களைந்து பிறந்த கோலத்துடனேயே விட்டேன். நான் அப்போது மனிதனுக நிற்கவில்லை. என் உணர்ச்சிகள் ஒரு பயங்கர ஓநாயின் உணர்ச்சி போல வெறி பிடித்திருந்தன. மல்லிகா கெஞ்சினுள். என் காலைப்பிடித்தாள். ஆனுல் திட்டத்தின் ஆரம்பப்படி தானே அது. அதன் பின்பு தான் அவள் என் சொற்படி நடக்க முனைந்தாள். சில நாட்களில் பாஸ்கரும் இறந்து விட்டான். மல்லிகாவும் இறந்து விட்டாள்: ஆனுல் அவ்விடயத்தை வெளியிடவில்லை. சும்மா கதைகட்டி விட்டேன். அவளை ஓர் பாதாள அறையில் பூட்டி விட்டேன். சில வேளை அவர்களின் ஆவி தான் இப்படியான ஜாலங்கள்செய்கின்றனவோ தெரியவில்லை' என்று கூறி நிறுத்தியபோது கீதாவின் பூவுடல் நடுங்கியது.







இ. எதிர்மன்னசிங்கம்,
தம்பதிகள்,
கல்லடி, மட்டுநகர்

கே: நாகேஷ், மஞேரமா வாழ்க்கையில் ஜோடி சேர்ந்துள்ளார்கள் என்பது உண்மையா?

ப: கட்டுக்கதை!

கே: கே. ஆர். விஜயா இவ்வளவு கெதியில் பிள்ளை பெறக் காரணம் என்ன?

ப: இதில் கெதியொன்றுமில்லையே-ஏனைய பெண்களைப் போல 10 மாதம் சுமந்துதான் குழந்தை பெற்றிருக்கிருர் விஜயா. வேறு காரணத்தை அவரது கணவர் வேலாயுதத்திடம் கேளுங்கள்!

ஃ

அ. வெற்றிவேலாயுதம்,
கொல்லங்கலட்டி

கே: எம். ஜி. ஆருக்கு நடிக மன்னன் பட்டம் யாரால் வழங்கப்பட்டது?

ப: எம். ஜி. ஆரின் நாடோடி மன்னனின் 100 வது நாள் வெற்றிவிழாவின் போது அப்போது தமிழக நிதி யமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் இப்பட்டத்தை வழங்கினுர்!

ஃ

கே. எஸ். பாலு,
நெல்லியடி

கே: காதல் மன்னனின் பணமா பாசமா படம் இந்தியாவில் எத்தனை நாட்களாக ஓடுகிறது. எத்தனை தியேட்டரில்?

ப: இம் மாதம் 20-ந் திகதியுடன் 86 வது நாளாக 4 தியேட்டர்களில் ஜாம் ஜாமென்று ஓடிக்கொண்டிருக்கிறது!

ஃ

எம். சிவனடியான்,
டிக்கோயா

கே: நடிகர் சுந்தரராஜனின் முகவரி என்ன?

ப: பிரகாஷ் ராவ் ரேட் பாலாஜி நகர், சென்னை-14.

ஃ

டி. சோமபால,
கே. ராமஜெயம்,
பட்டியகம பஜார்

கே: மக்கள் [illegible] நடித்த, ரகசிய போலிஸ் 115 படம் இலங்கைக்கு எப்போது வரும்.

ப: விரைவில் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் திரையிடப்படவிருக்கிறது.

ஃ

தி. செ. ரத்தினம்,
யாழ்ப்பாணம்.

கே: சிவாஜி கணேசன் நடித்த கலாட்டா கல்யாணம் இந்தியாவில் திரையிடப்பட்டுவிட்டதா? திரையிடப்பட்ட திகதி என்ன?

ப: ஏப்ரல் 12-ந் திகதி திரையிடப்பட்டுவிட்டது!

ஃ

அ. அரிய குமார்,
குடத்தனை

கே: எம். ஜி. ஆரா, சிவாஜியா கூடுதலான படத்தில் நடித்திருக்கிருர்கள்?

ப: சிவாஜி கணேசன்!

ஃ


வ. திருச்செல்வன்,
ஏழாலை மேற்கு

கே: சிவாஜி கணேசன் நடித்த கலாட்டா கல்யாணம், பக்த விஜயம் வர்ணப் படமா? பக்த விஜயத்தில் சிவாஜியுடன் சேர்ந்து நடிக்கும் நடிகை யார்?

ப: வர்ணப் படங்களே! பக்த விஜயத்தில் சிவாஜியுடன் நடித்து வருபவர் சௌகார் ஜானகி.

திரைவாணன்
சுதந்திரன்
[illegible]
த. பெ. இல. [illegible]
கொழும்பு.

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'


போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு -14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது மகத்தான திரைவிருந்தாக காட்சியளிக்கிறது!
காட்சிக்குக் காட்சிகைதட்டல்! விறுவிறுப்பூட்டும் சண்டைக்காட்சிகள்!
ஆரம்பம் முதல் இறுதிவரை முழுக்க முழுக்க ஜேம்ஸ் பொண்ட்!!





சென்றல் (மருதானை) நவா (கொம்பனித்தெரு) லவீனியர் (நுகெகொடை)
ராணி (யாழ்நகர்) ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஜோதி (திருமலை) மீபுர (நீர்கொழும்பு)

ஜெய்சங்கர் ● பாரதி ● சோ ● ராதிகா ● தேவர்
—நடித்த—
நவசக்தி பிலிம்ஸ்

நான் யார் தெரியுமா?
—பாஸ்கள் சலுகைகள் ரத்து—

எமது அடுத்த வெளியீடு



திருச்சி சௌந்தரராசன், வீ. ஆர். திலகம், ரமணாதிலகம் நடிக்கும்:-

பணம் தரும் பரிசு

கெயிட்டி கடைசி சில தினங்கள்
எம். ஜி. ஆர்., பானுமதி, பத்மினி
நடிக்கும்
மதுரை வீரன்

செல்லமகால் 3-வது வெற்றிவாரம்
ரவிச்சந்திரன், ஜெயலலிதா, நாகேஷ்
நடிக்கும்
மகராசி

வெற்றி முழக்கமிடும் மூன்றுவது வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) விஜிதா (அட்டன்)





ஜெய்சங்கர் விஜயலட்சுமி மனோகர்
ஸ்ரீராம் ஷீலா விஜயலலிதா புஷ்பமாலா
தேங்காய் சீனிவாசன் பக்கிரிசாமி நடித்த
வல்லவன் ஒருவன்

3-வதுவாரம் வெலிங்டன் (யாழ் நகர்)
பெற்றால்தான் பிள்ளையா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் மே மாதம் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.